இணைப்பு :2

**<u>மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான உள்ளடக்கிய கல்வி சார்ந்த மார்ச் மாதத்திற்கான பள்ளி மேலாண்மைக் குழு கலந்துரையாடல்</u>**

**சிந்தனையில் மாற்றம்! சமூகத்தின் ஏற்றம்!**

நவம்பர் மாதம் முதல் ஒவ்வொரு மாதமும் பள்ளி மேலாண்மைக் குழு கூட்டங்களில் மாற்றுத்திறனாளி குழந்தைகளை ஆரம்ப காலத்திலேயே கண்டறிதல், பள்ளியில் சேர்த்தல் மற்றும் அவர்களுக்கான தேர்வுச் சலுகைகள் குறித்து கலந்தாலோசித்தல் மற்றும் தீர்மானங்கள் எடுத்தல் போன்ற செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதனைத் தொடர்ந்து மார்ச் மாதம் நடைபெறவிருக்கும் பள்ளி மேலாண்மைக் குழு கூட்டத்தில் மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான உள்ளடக்கிய கல்வியில் உள்ள செயல்பாடுகளான மருத்துவ முகாம் மற்றும் வட்டார அளவிலான உள்ளடக்கிய கல்வி மையங்கள் பற்றி தலைமையாசிரியர் பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களுக்கு எடுத்துரைத்தல் வேண்டும்.

<u>மருத்துவ முகாம்</u>

- ஒவ்வொரு வருடமும் பள்ளிக் கல்வித் துறை, மற்ற துறைகளான மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, மருத்துவத்துறை, போக்குவரத்துறை போன்ற துறைகளுடன் இணைந்து வட்டார அளவில் மருத்துவ முகாம்களை நடத்தி வருகின்றது.
- 0 - 18 வயது வரை உள்ள மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான மருத்துவ முகாம் இவ்வாண்டு மாநிலம் முழுவதும் ஜனவரி மாதம் 3ம் தேதி துவங்கி மார்ச் மாதம் 10ம் தேதி வரை வட்டார அளவில் நடைபெற்று வருகிறது.
- வட்டார அளவில் நடைபெறும் இம்முகாம்களில் கண்டறியப்பட்ட மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான மருத்துவ மதிப்பீடு, அடையாள அட்டை வழங்குதல், போக்குவரத்து சலுகைகள், உதவி உபகரணங்கள், உதவித்தொகை,

தேர்வுச் சலுகைகள் போன்றவை கிடைக்கப்பெற ஒரு வாய்ப்பினை பள்ளிக்கல்வித்துறை ஒவ்வொரு வருடமும் ஏற்படுத்தி வருகிறது.

*[மாவட்ட உள்ளடக்கிய கல்வி ஒருங்கிணைப்பாளர்கள் - வட்டார வாரியாக நடைபெற்ற மருத்துவ முகாம் பற்றிய தகவல்களை பகிர்தல் வேண்டும்.*

*இதுவரை மருத்துவ முகாம்களை மேற்கொள்ளாத மாவட்டங்கள், நடைபெறவிருக்கும் முகாம்களின் விவரங்களை பகிர்தல் வேண்டும்.*

*முகாம் முடிக்கப்பட்ட மாவட்டங்கள், ஒவ்வொரு வட்டாரத்திலும் இம்முகாம் மூலம் பயன்பெற்ற மாற்றுத்திறனாளி மாணவர்களின் எண்ணிக்கையினை பகிர்தல் வேண்டும்]*

- மேற்குறிப்பிட்ட விவரங்களை பகிர்ந்தபின் தலைமையாசிரியர் பள்ளியில் உள்ள மாற்றுத்திறனாளி மாணவர்களின் பட்டியலையும் அவர்கள் பெற்றுள்ள சலுகைகளையும் பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களுக்கு தெரியப்படுத்துதல் வேண்டும்.
    - மேலும் சலுகைகள் பெறவேண்டிய மாணவர்களின் பட்டியலை தலைமையாசிரியர், சம்பந்தப்பட்ட ஆசிரியர் பயிற்றுநருக்கு தெரியப்படுத்துதல் வேண்டும்.
    - அந்த மாணவர்களுக்கு சலுகைகள் கிடைக்கப்பெற்றதன் விவரத்தை ஒவ்வொரு மாதமும் ஆசிரியர் பயிற்றுநர் மூலமாக அறிந்து தலைமையாசிரியர் பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களுக்கு தெரிவித்தல் வேண்டும்.
    - உங்கள் பள்ளியில் மாற்றுத்திறனாளி குழந்தைகள் இல்லாது இருந்தால் நீங்கள் வசிக்கும் பகுதியில் கண்டறியப்படாமல் இருக்கும் மாற்றுத்திறனாளி குழந்தைகளை பற்றிய விவரங்களை சேகரித்து, பள்ளி மேலாண்மைக் குழுவிற்கும், சம்பந்தப்பட்ட ஆசிரியர் பயிற்றுநருக்கும் தெரிவிக்கவும். அக்குழந்தைகளின் பெற்றோர்களுக்கு பள்ளியில் சேர்ப்பது மற்றும்

மருத்துவ முகாம் பற்றிய விவரங்களை எடுத்துரைத்து பள்ளியில் சேர ஊக்குவிக்கவும்.

**உள்ளடக்கிய கல்வி மையம்**

தலைமையாசிரியர் ஒவ்வொரு வட்டாரத்திலும் செயல்பட்டு வரும் உள்ளடக்கிய கல்வி மையங்களைப் பற்றிய கீழ் வரும் தகவல்களை பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களுக்கு எடுத்துரைத்தல் வேண்டும்.

- ஒவ்வொரு வட்டாரத்திலும் உள்ளடக்கிய கல்வி மையங்களில் சிறப்பு ஆசிரியர் மற்றும் இயன்முறை மருத்துவர் மூலம் மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான சிறப்புக் கல்வி மற்றும் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றது.
- அவ்வட்டாரத்தில் உள்ள உள்ளடக்கிய கல்வி மையம் பற்றிய தகவலை (முகவரியை) பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களுக்கு பகிர்தல் வேண்டும்.
- பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் தாங்கள் வசிக்கும் பகுதியில் இருக்கும் மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு உள்ளடக்கிய கல்வி மையம், அதன் முகவரி மற்றும் அதன் சேவைகளை எடுத்துரைத்து அம்மாணவர்களை இம்மையங்களுக்கு வர ஊக்குவித்தல் வேண்டும்.
- உங்கள் பள்ளியில் எத்தனை மாற்றுத்திறனாளி மாணவர்கள் இம்மையங்களுக்கு சென்று அதன் சேவைகளை பெறுகிறார்கள் என்ற தகவலை தலைமையாசிரியரிடம் கேட்டு அறிதல் வேண்டும். மேலும் அம்மையத்திற்கு சென்று பயன்பெற வேண்டிய குழந்தைகளின் தகவல்களை பெற்று அவர்களின் பெற்றோருடன் கலந்தாலோசித்தல் வேண்டும்
- கடந்த மாதங்களில் (நவம்பர் முதல் பிப்ரவரி வரை) பள்ளி மேலாண்மைக் குழு கூட்டங்களில் மாற்றுத்திறனாளி மாணவர்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட தீர்மானங்களை முன்னிட்ட செயல்பாடுகள் எந்த நிலையில் உள்ளன என்பதை செயலியிலும், குறிப்பேட்டிலும் பதிவிடல் வேண்டும்.

பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் மார்ச் மாத குழு தீர்மானமாக கீழ் கொடுக்கப்பட்டுள்ள தீர்மானங்களை தேர்வு செய்யலாம். எடுக்கப்பட்ட தீர்மானத்தை செயலியிலும் குறிப்பேட்டிலும் பதிவிடல் வேண்டும்.

- *மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகளின் பெற்றோர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல்*
- *மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகளை அடையாளம் காணுதல்*
- *மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகளின் சேர்க்கை*